நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை.**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருமங்கலம்.
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1138/2022
**CNR No.TNMD14 - 003362 - 2022**
*****

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,

கள்ளிக்குடி காவல் நிலையம்,

குற்ற எண்.155/2022 ... குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

1. ராஜமாணிக்கம் (எ) மாணிக்கம் (வயது 37/2022),

த/பெ.முத்தையா,

2. மதன்பாண்டி (எ) மதன் (வயது 18/2022),

த/பெ.கிருஷ்ணமூர்த்தி,

3. சோலைராஜன் (எ) கண்ணன் (வயது 30/2022),

த/பெ.தெய்வேந்திரன்,

4. தினேஷ்குமார் (வயது 19/2022).

த/பெ.பாலமுருகன்,

1 முதல் 4 வரையுள்ள எதிரிகளின் முகவரி:–

மையிட்டான்பட்டி, கள்ளிக்குடி தாலுகா,

மதுரை மாவட்டம். ... குற்றம் சாட்டப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1138/2022** | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | கள்ளிக்குடி காவல் நிலைய குற்ற எண்.155/2022 |
| **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | |

| | | | |
|---|---|---|---|
| 3. | எதிரிகளின் பெயர் | : | 1. ராஜமாணிக்கம் (எ) மாணிக்கம்<br>2. மதன்பாண்டி (எ) மதன்<br>3. சோலைராஜன் (எ) கண்ணன்<br>4. தினேஷ்குமார் |
| 4. | எதிரிகளின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | 1. த/பெ.முத்தையா<br>2. த/பெ.கிருஷ்ணமூர்த்தி<br>3. த/பெ.தெய்வேந்திரன்<br>4. த/பெ.பாலமுருகன் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | எதிரிகளின் முகவரி | : | 1 முதல் 4 வரையுள்ள எதிரிகளின் முகவரி:– மையிட்டான்பட்டி, கள்ளிக்குடி தாலுகா, மதுரை மாவட்டம். |
| 7. | எதிரிகளின் வயது | : | 1. 37/2022<br>2. 18/2022<br>3. 30/2022<br>4. 19/2022 |
| **தேதி விபரங்கள்** | | | |
| 8. | சம்பவம் | : | 16.10.2022 |
| 9. | புகார் | : | 18.10.2022 |
| 10. | கைது தேதி | : | –– |
| 11. | பிணை விடுப்பு | : | Anticipatory Bail |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 11.03.2026 |
| 14. | விசாரணை முடிவு | : | 13.03.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | : | -- |
| 17. | Period of Remand of the accused | : | - |

| | | | |
|---|---|---|---|
| 18. | Date of filing of the final report | : | 30.11.2022 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 20.04.2023 |
| 20. | Miscellaneous petition and their results | : | U/s.311 CrP.C – Allowed<br>U/s.320 Cr.P.C - Dismissed |
| 21. | Date of examination in chief and cross | : | <table><tr><th>PW's</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>1.</td><td>11.03.2026</td><td>--</td></tr><tr><td>2.</td><td>11.03.2026</td><td>--</td></tr><tr><td>3.</td><td>11.03.2026</td><td>--</td></tr><tr><td>4.</td><td>11.03.2026</td><td>11.03.2026</td></tr></table> |
| 22. | Date of examination accused U/s.313 Crpc | : | 13.03.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | **காலதாமதத்திற்கான காரணம்: இல்லை** | | |

இவ்வழக்கானது கடந்த 06.12.2022ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையின் போது, அரசின் சார்பாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், சாட்சிகளின் சாட்சியங்களையும், ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

**தீர்ப்புரை**

கடந்த 16.10.2022ம் தேதி வாதியை விருதுநகர் பொட்டல் என்ற இடத்தில் இருந்து சாட்சி –2 வேலைக்காக மையிட்டான்பட்டியை சேர்ந்த சாட்சி –7க்கு சொந்தமான கோழிப்பண்ணையில் வேலை பார்த்து

கொண்டிருந்ததாகவும், கோழிப்பண்ணையில் மையிட்டான்பட்டியை சேர்ந்த சாட்சிகள் 2 முதல் 5 வரையுள்ளவர்கள் கோழிப்பண்ணையில் தளம் போடும் வேலையை இரவு வரை தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்த போது, சாட்சி –6விடம் டிரைவராக வேலை செய்யும் மையிட்டான்பட்டியை சேர்ந்த 1வது எதிரி வேலை செய்பவர்களுக்கு இரவு சுமார் 09.30 மணியளவில் சாப்பாடு கொண்டு சென்றவர், சாப்பாடு வாங்கி கொடுப்பதை சொல்லி தகாத வார்த்தையில் பேசியதாகவும், அதற்கு சாட்சி –2, 1வது எதிரியை சத்தம் போடாமல் போப்பா என்று சொல்ல, அதற்கு 1வது எதிரி நீ என்ன சொல்லுறது என்று சொல்லி தகராறு செய்ததாகவும், வாதி 1வது எதிரியை வீட்டிற்கு போப்பா என்று சொல்ல, 1வது எதிரி, வாதியை நீ என்னடா சொல்லுறது தேவிடியா மகனே என்று வாதியை அசிங்கமாக பேசி, ஊருக்குள் சென்று 2 முதல் 4 வரையுள்ள எதிரிகளை கூட்டிகொண்டு சம்பவ இடத்திற்கு வந்து, 1வது எதிரி வாதியை பார்த்து, ஏன்டா தேவிடியா மகனே, எங்க ஊருக்கு வந்து என்னயவே போன்னு சொல்றியா நீ, என்று சொல்லி கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியின் இடது பக்க பின்னந்தலையில் அடித்து வாதிக்கு ரத்தக்காயத்தையும், 2 முதல் 4 வரையுள்ள எதிரிகள் அருகில் கிடந்த கம்பை ஆளுக்கொன்றாக எடுத்து வாதியை முன்னந்தலை, நெற்றி, உதடு ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்து இரத்தகாயத்தை ஏற்படுத்தியும், 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் வாதிக்கு கொலைமிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக 1வது எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) IPCன் படியும் 2 முதல் 4 வரையுள்ள எதிரிகள் சட்டப்பிரிவுகள் 324, 506(2) IPCன் படியும் குற்றம் புரிந்துள்ளதாக கள்ளிக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான போது எதிரிகளுக்கு வழக்கு நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

03. இவ்வழக்கில் எதிரிகளுக்கு நகல்கள் வழங்கப்பட்ட பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பிறகு குற்றம் பற்றி வினவிய போது எதிரிகள் பொய் வழக்கு என்று மறுத்து கூறினார்கள். இரு தரப்பும் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால் எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) IPCன் கீழ் குற்றசாட்டுகள் வனைந்து படித்துக்காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்ட போது எதிரிகள் மீண்டும் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை என்றார்கள்.

04. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

05. கடந்த 16.10.2022ம் தேதி வாதியை விருதுநகர் பொட்டல் என்ற இடத்தில் இருந்து சாட்சி –2 வேலைக்காக மையிட்டான்பட்டியை சேர்ந்த சாட்சி –7க்கு சொந்தமான கோழிப்பண்ணையில் வேலை பார்த்து கொண்டிருந்ததாகவும், கோழிப்பண்ணையில் மையிட்டான்பட்டியை சேர்ந்த சாட்சிகள் 2 முதல் 5 வரையுள்ளவர்கள் கோழிப்பண்ணையில் தளம் போடும் வேலையை இரவு வரை தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்த போது, சாட்சி –6விடம் டிரைவராக வேலை செய்யும் மையிட்டான்பட்டியை சேர்ந்த 1வது எதிரி வேலை செய்பவர்களுக்கு இரவு சுமார் 09.30 மணியளவில்

சாப்பாடு கொண்டு சென்றவர், சாப்பாடு வாங்கி கொடுப்பதை சொல்லி தகாத வார்த்தையில் பேசியதாகவும், அதற்கு சாட்சி –2, 1வது எதிரியை சத்தம் போடாமல் போப்பா என்று சொல்ல, அதற்கு 1வது எதிரி நீ என்ன சொல்லுறது என்று சொல்லி தகராறு செய்ததாகவும், வாதி 1வது எதிரியை வீட்டிற்கு போப்பா என்று சொல்ல, 1வது எதிரி, வாதியை நீ என்னடா சொல்லுறது தேவிடியா மகனே என்று வாதியை அசிங்கமாக பேசி, ஊருக்குள் சென்று 2 முதல் 4 வரையுள்ள எதிரிகளை கூட்டிகொண்டு சம்பவ இடத்திற்கு வந்து, 1வது எதிரி வாதியை பார்த்து, ஏன்டா தேவிடியா மகனே, எங்க ஊருக்கு வந்து என்னயவே போன்னு சொல்றியா நீ, என்று சொல்லி கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியின் இடது பக்க பின்னந்தலையில் அடித்து வாதிக்கு ரத்தக்காயத்தையும், 2 முதல் 4 வரையுள்ள எதிரிகள் அருகில் கிடந்த கம்பை ஆளுக்கொன்றாக எடுத்து வாதியை முன்னந்தலை, நெற்றி, உதடு ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்து இரத்தகாயத்தை ஏற்படுத்தியும், 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் வாதிக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக உள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>

06. இவ்வழக்கின் வாதி சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் மற்றும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் பற்றியும் பாண்டி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கிவிட்ட விபரம் பற்றி அர்ஜுனன் மற்றும் அழகுபாண்டி ஆகியோர்கள் முறையே அ.சா.2 மற்றும் 3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கினை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட கள்ளிக்குடி சார்பு ஆய்வாளர் திரு.ரமேஷ்பாபு என்பவரை தனக்கு நன்கு தெரியும் என்றும்

அவரது கையெழுத்து நன்கு தெரியும் என்றும் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக கள்ளிக்குடி காவல் நிலைய தலைமை காவலர் திரு.பவுன்ராஜ் என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் அ.சா.1ன் காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>எதிரிகளை கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

07. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது அவற்றை எதிரிகள் பொய் சாட்சியம் என்று கூறியதோடு தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்கள். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**<u>வாதுரைகள்:–</u>**

08. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பில் எதிரிகள் மீதான வழக்கை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

09. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.துரைப்பாண்டி அவர்கள் வாதிடும் போது அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட வழக்கு என்றும் எதிரிகளும் அ.சா.1ம் தற்பொழுது சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், இந்த வழக்கின் சம்பவ சாட்சிகள் அனைவரும் தங்களது

சாட்சியத்தின் போது அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாகவும் எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

<u>ஆய்வுக்குரிய பிரச்சனை:–</u>

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகளின் மீதான இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) IPCன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>சாட்சிகளின் மதிப்பீட்டல்:–</u>

11. இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரான அ.சா.1 தனது சாட்சியத்தின் பொழுது கடந்த 16.10.2022 அன்று இரவு சுமார் 09.00 மணியளவில் தாங்கள் அங்கு இருக்கும் கோழிப்பண்ணையில் தளம் போட்டு கொண்டிருந்த போது யாரோ சில நபர்கள் தன்னை தகாத வார்த்தைகளால் பேசி அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது தான் புகார் கொடுத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் தங்களுக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றும் போலீசார் தங்களை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

13. இவ்வழக்கில் எதிரிகளும் அ.சா.1ம் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி சமாதானமனு தாக்கல் செய்துள்ளார்கள்.

14. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 மற்றும் சம்பவ சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை சாட்சியாக விசாரித்தாலும் வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக கள்ளிக்குடி காவல் நிலைய தலைமை காவலர் திரு.பவுன்ராஜ் என்பவரை அ.சா.4 ஆக விசாரித்து, அவர் மூலமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து அரசு தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

15. மேற்கண்டவாறு அரசு தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் 3 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அவர்கள் எந்த இடத்திலும் எதிரிகள் அ.சா.1ஐ பொது இடத்தில் பொது மக்களுக்கு மத்தியில் வைத்து திட்டியதாகவோ, அ.சா.1ஐ அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவோ, அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது பற்றி அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரிகளை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்ககூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் இல்லாததால் எதிரிகள் மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

16. முடிவாக, அரசு தரப்பு வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) IPCன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. சொத்துக்கள் இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**1. அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா.1. பாண்டி

அ.சா.2. அர்ஜுனன்

அ.சா.3. அழகுபாண்டி

அ.சா.4. பவுன்ராஜ், தலைமை காவலர்.

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ.1. புகார் மனு

அ.சா.ஆ.2. முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.3. பார்வை மகஜர்

அ.சா.ஆ.4. மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.5. அ.சா.1ன் காயச்சான்று

**3. சான்று பொருள்:–** இல்லை

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:–** 1) விசாரணையின் போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:–** மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.03.16 16:08:26 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.